**அந்நியச் செலாவணி கண்காணிப்புச்சட்டம் 1999**
**வெளிநாட்டுப் பயணம்**
**A.P. (DIR Series ) சுற்றறிக்கை எண் 19 (அக்டோபர் 30, 2000)**

**பாரத ரிசர்வ் வங்கி**
**அந்நியச் செலாவணிக்கட்டுப்பாட்டுத் துறை**
**மைய அலுவலகம்**
**மும்பை – 400 001**

AP (DIR Series) சுற்றறிக்கை எண் 19 அக்டோபர் 30, 2000

அங்கீகாரம் பெற்ற அந்நியச்செலாவணி வணிகர் யாவருக்கும்

அன்புடையிர்,

**அந்நியச் செலாவணி கண்காணிப்புச்சட்டம், 1999**
**(FEMA 1999)**
**வெளிநாட்டுப் பயணம்**

இந்திய அரசின் அறிவிப்பு எண் GSR 381 (E).B. மே மாதம் 3, 2000 தேதியிடப்பட்டதில் கண்டுள்ள அந்நியச்செலாவணி கண்காணிப்பு (நடப்புக்கணக்கு நடவடிக்கைகள்) விதிகள் 2000 ன் படி, சில நடப்புக் கணக்கு நடவடிக்கைகளுக்காக, அந்நியச் செலாவணியைக்கணக்கிலிருந்து பெறுவது தடைசெய்யப்பட்டு, வேறு பல நடவடிக்கைகளில் கட்டுபாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதில் விதி 5ன் படி அட்டவணை III ல் குறிப்பிடப் பட்டுள்ள சில நடவடிக்கைகளுக்கு ரிசர்வ் வங்கியின் குன் அனுமதி தேவை. இதன்படி அங்கிகரிக்கப் பட்ட வணிகர்கள் இந்தச்சுற்றறிக்கையின் பின்னிணைப்பில் அடங்கியுள்ள கட்டளைகளின்படி, வெளிநாட்டுப் பயணத்திற்காக் அந்நியச்செலாவணி கோரும் விண்ணப்பங்களைப் பரிசீலித்து செயல்படும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2. இந்திய அரசின் நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள அவர்களின் 3.5.2000 தேதியிட்ட அறிவிப்பில் கண்டுள்ள விதிகளோடு, இந்த சுற்றறிக்கையின் பின்னிணைப்பில் அடங்கியுள்ள கட்டளைகளையும் சேர்த்துப்படித்து செயல்படுவது தெளிவுபடுத்தப்படுகிறது.

3. இந்திய அரசின் அறிவிப்பு எண் GSR 381(E) 3.5.2000 தேதியிட்டதில் விதி (2) உள்ள பகுதிக்கூறு (b)ன் கருத்துப்படி கணக்கிலிருந்து அந்நியச் செலாவணி பெறுதல் என்பது, பன்னாட்டுக்கடன் அட்டை, பன்னாட்டு பற்று அட்டை, தானியங்கி பணம் வழங்கு அட்டை இவற்றின் பயன்பாட்டால் செலவிடப்படும் பணத்தையும் குறிக்கும். ஆகவே இவற்றின் உபயோகங்கள் மேற்குறிப்பிட்ட விதியிலுள்ள கட்டுப்பாடுகளில் அடங்கும். அந்நியச் செலாவணி கண்காணிப்புச்சட்டம் 1999(FEMA 1999) சட்டப்பிரிவு எண் 2ன் பகுதிக்கூறு (h)ல் சொல்லியபடி மற்றவைகளுக்கிடையே, 'பணம்'

என்ற சொல், பன்னாட்டுக் கடன் அட்டைகளையும் குறிக்கும். அதோடு ரிஸர்வ் வங்கியும் தனது அறிவிப்பு எண் FEMA/5/RB-2000, 3.5.2000 தேதியிட்டதில் தானியங்கி பணம் வழங்கு அட்டை, மற்றும் பற்றுஅட்டை ‘பணம்’ எனப்படும் என்றுகுறிப்பிட்டுள்ளது. ஆகவே கடன் அட்டை, பற்று அட்டை, மற்றும் தானியங்கி பணம் வழங்கு அட்டை மூலம் செய்யப்படும் பட்டுவாடாக்கள், செலவுகள் அனைத்திற்குமே இந்த சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும் விதிகள், விதிமுறைகள் மற்றும் கட்டளைகள் பொருந்தும்.

4. சொந்த காரணங்களுக்காக அன்றி வேறு சில நோக்கங்களுக்காக வெளிநாடு செல்லும் ஒருவருக்கு விற்கப்பட்ட அந்நியச்செலாவணி மதிப்பினை அந்தப்பயணம் மேற்கொள்பவரின் பாஸ்போர்ட்(பயண இசைவுச் சீட்டு)டில் பதிவு செய்ய வேண்டியது சட்டவிதியன்று. எவ்வாறாயினும், சொந்த முறைக் காரணங்களுக்காக பயணம் மேற்கொள்ளும் பயணிக்கு விற்கப்படும் அந்நியச்செலாவணித் தொகையை அந்தப்பயணியின் அடிப்படை பயணச்செலவு ஒதுக்கீடு (Basic Travel Quota) என்பதாகக் கொண்டு, அந்தப் பயணியின் பாஸ்போர்டில் (பயண இசைவுச்சீட்டு) அங்கிகரிக்கப் பட்ட வணிகரின் முத்திரை, கையோப்பமிட்டு, தேதியோடு குறிப்பிடுதல் மிகமிக இன்றியமையாத ஒன்றாகும்.

5. அமெரிக்கா டாலர் 25,000 அல்லது அதற்கு நிகரான தொகைக்கு மிகாமல், முன்பணமாக ஒரு தொகையை அந்நியச்செலாவணி வழங்க அனுமதிக்கப்பட்ட நடப்புக்கணக்கு நடவடிக்கை எதன் பொருட்டாவது அனுப்பிட அங்கிகரிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதி வழங்கலாம். அந்தப் பணம் 25,000 அமெரிக்க டாலரைத்தாண்டும் போது, அதனால் வெளிநாட்டில் பயன் பெறுபவரிடமிருந்து வெளிநாட்டிலுள்ள பன்னாட்டு புகழ் பெற்ற ஒரு வங்கியின் உத்தரவாதம் அல்லது அத்தகைய அயல் நாட்டிலுள்ள பன்னாட்டுப்புகழ் பெற்ற வங்கி அளித்த உத்தரவாதத்திற்க்கான எதிர்தரப்பு உத்தரவாதமாக இந்தியாவிலுள்ள அங்கிகரிக்கப் பட்ட வணிகர் அளிக்கும் உத்தரவாதம் தரப்படவேண்டும். இந்தியாவிலிருந்து பணத்தை முன்கூட்டியே பெற்றிட்ட அந்த அயல் நாட்டவர் தனது கடமையை, அல்லது ஒப்பந்தத்தை சரிவர நிறைவேற்றினார் என்பதை அங்கிகரிக்கப் பட்ட வணிகர் பின்சென்று கவனித்து உறுதி செய்து கொள்ளவேண்டும்.

6. “அந்நியச்செலாவணி கட்டுப்பாட்டுக்கையேட்டில்” (1993ன் பதிப்பு) அதிகாரம் 8ல் பாரா-Aல் அடங்கியுள்ளவை மற்றும் அதன் பின்னிணைப்புகள் – I, II, மற்றும் IV அடங்கியுள்ள அனைத்திற்கும் பதிலாக இந்தச் சுற்றறிக்கையின் பின்னிணைப்பில் அடங்கியுள்ள கட்டளைகள் வெளியிடப் படுகின்றன.

7. இந்தச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள கருத்துக்களை அங்கிகரிக்கப்பட்ட வணிகர்கள் தத்தம் குழு முகவர்கள் கவனத்திற்குக் கொண்டு செல்வாராக.

8. இந்தச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள கட்டளைகள்யாவும் அந்நியச் செலாவணி கண்காணிப்புச் சட்டம் 1999 (FEMA 1999) (42 of 1999)ன் கீழ் வெளியிடப்படுகின்றன. இவற்றைக் கடைப்பிடிக்காதிருத்தல், மற்றும் அவற்றை மீறுதல் இச்சட்டத்தில் குறிப்பிடப் பட்ட தண்டனைத் தொகை செலுத்தும் நிலைக்கு ஒருவரை உரியதாக்கும்.

தங்கள் உண்மையுள்ள

K.J. உதேஷி
துணைப்பொது மேலாளர்

**பின்னிணைப்பு**

**அயல்நாட்டுப் பயணம்**

## A.1. பொதுவானவை

அந்நியச்செலாவணிச்சட்டம் 1999 (FEMA 1999)ல் சட்டப்பிரிவு எண் 5ன் கீழ் இந்திய அரசு வகுத்துள்ள விதிகளின் வழிகாட்டுதல் படியே, இந்திய குடியிருப்பாளருக்கு அவரின் வெளிநாட்டுப்பயணத்திற்குக் தேவையான் அந்நியச்செலாவணி வழங்கப்பட வேண்டும்.

3.5.2000 தேதியிடப்பட்ட இந்திய அரசின் அறிவிப்பு எண் G.S.R. 381 (E)ல் குறிப்பு எண் (b)ல் குறிப்பிட்டுள்ளபடி நேபாளம் மற்றும் பூடானுக்கு செல்வதற்கு அந்நியச்செலாவணி வழங்கப்படமாட்டாது. அந்த அறிவிப்பின் அட்டவனை IIIல் குறிப்பிட்டுள்ள சில வரையறைகளைத் தாண்டி அந்நியச் செலாவணி வழங்கும்போது ரசர்வ் வங்கியின் முன் அனுமதி பெறப்படவேண்டும். இந்த இந்திய அரசு அற்றிவிப்பின் அட்டவணை III ல் குறிப்பிட்டுள்ள வரையறைகளை மீறும் வகையிலமைந்த அந்நியச் செலாவணி வெளியீட்டுக்கான் விண்ணப்பங்கள் யாவும், அந்தந்த விண்ணப்பதாரர் வசிக்கும் அல்லது செயல்வடும் இடத்தின் ஆட்சி எல்லைக்குட்பட்ட ரிசர்வ் வங்கியின் பிராந்திய அலுவலகத்திலுள்ள அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டுத்துறையின் அறிவுரைக்கோரி அனுப்பப்பட வேண்டும்.

## A.2 செலாவணி விற்பனை

a) ரிசர்வ் வங்கி, அல்லது இந்திய அரசு ஒப்பதல் சீட்டு/ அனுமதிச்சீட்டு அளித்திருக்குமாயின், அந்நியச்செலாவணியை அந்தசீட்டுகளில் குறிக்கப் பட்ட மதிப்பீட்டுக் காலத்திற்குள் வழங்கி அதற்கான் பதிவினை அந்தச் சீட்டுகளின் பின்புறத்தில் குறித்தல் வேண்டும்.

b) சொந்தக் காரணங்களுக்காக அன்றி வேறு சில நோக்கங்களுக்காக வெளிநாடு செல்லும் ஒருவருக்கு அந்நியச்செலாவணியை விற்கும் அங்கிகரிக்கப்பட்ட வணிகர், அதனைப் பயணியின் பயண இசைவுச்சீட்டில் (பாஸ்போர்ட்) பதிவு செய்யத் தேவையில்லை. ஆயினும், சொந்தக் காரணங்களுக்காக ஒருவர் மேற்கொள்ளும் பயணத்திற்கு விற்கப்படும் அந்நியச் செலாவணித் தொகையைக் கட்டாயமாக அந்த நபரின் பயண இசைவுச்சீட்டில் (பாஸ்போர்ட்) தேதி, முத்திரை, கையெழுத்துடன் அங்கிகரிக்கப் பட்ட வணிகர் பதிவு செய்திட வேண்டும்.

**குறிப்பு :**

A) சொந்தக் காரணங்களுக்காக அல்லாத சிலவற்றிற்காக மேற் கொள்ளப்படும் பயணத்திற்காக விற்கப்பட்ட அந்நியச் செலாவணித் தொகையை, அந்தப்பயணியின் வேண்டுகோளுக்கிணங்கி அங்கிகரிக்கப் பட்டவணிகர், தனது முத்திரை, கையொப்பத்துடன் பதிவு செய்து

வைக்கலாம்.

B) பெற்றோரின் பயண இசைவுச்சீட்டில் (பாஸ்போர்ட்) பயணம் செய்யும் குழந்தைக்கான பின்புறக்குறிப்பை, இருவருக்கும் சேர்ந்த பயன் இசைவுச் சீட்டில் (பாஸ்போர்ட்) பதிவு செய்யலாம்.

C) பயணக்காசோலைகள் வழங்கும்போது, பயணிஅதை ஒரு அதிகாரப்பூர்வ அதிகாரியின் முன்னிலையில் கையெழுத்திட்டு வாங்க வேண்டும். பயணக்காசோலைகள் வாங்கியவர் அளித்த பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் படிவம் பாதுகாத்து வைக்கப்படவேண்டும்.

D) பயணிக்கு வழங்கப்படும் ஒட்டுமொத்த அந்நியச் செலாவணியில் கீழ்க்கண்ட வரையரைகளுக்குட்பட்டு, அயல் நாட்டுப்பணம் மற்றும் சில்லறை நாணயங்கள் விற்கப்படலாம்.

| | |
|---|---|
| (i) ஈராக், லிபியா, இஸ்லாமியக் குடியரசான ஈரான், ருஷ்ய பெடரேஷன், மற்றும் காமன் வெல்த் நாடுகளின் குடியரசான சுயேச்சை பிரதேசங்கள் தவிர மற்ற நாடுகளுக்குப் பயணம் செல்வோர் | 500 அமெரிக்க டாலர் அல்லது அதன் மதிப்புக்கு மிகாமல். |
| (ii) ஈராக் மற்றும் லிபியாவிற்குச் செல்வோர். | 5000 அமெரிக்க டாலர் அல்லது அதன் மதிப்புக்கு மிகாமல். |
| (iii) இஸ்லாமியக்குடியரசான ஈரான், ருஷ்ய பெடரேஷன், மற்றும் காமன் வெல்த் நாடுகளின் குடியரசான சுயேச்சை பிரதேசங்கள் | முழு அந்நியச் செலாவணி வழங்கப் படலாம். |

வெளிநாட்டுப் பயணத்திற்காக அந்நியச்செலாவணி விற்பனை செய்வது தொடர்பான A2 படிவங்கள், மற்றும் அதன் தொடர்புடைய ஆவணங்களுடன் உள்துறைத் தணிக்கையாள் பார்வையிடும் பொருட்டு ஓராண்டு காலத்திற்கு அங்கிகரிக்கப்பட்ட வணிகர்கள் பத்திரமாகப் பாதுகாத்து வைக்க வேண்டும்.

**A.3** மே. 3. 2000 தேதியிடப்பட்ட இந்திய அரசின் அறிவிப்பு எண் GSR 381 (E) லுள்ள விதி 5ன் படி, வெளிநாட்டில் பயணத்திற்குச் சென்ற ஒருவர் நோய்வாய்ப்பட்டால், அவரது மருத்துவச் சிகிச்சைக்காக அந்நியச்செலாவணி வழங்கப்படலாம்.

**A. 4 கலை பண்பாட்டுச் சுற்றுலாக்கள்**

நடனக்குழுவினர், மற்றும் கலைஞர்கள், கலை நிகழ்ச்சிகளுக்காக வெளிநாட்டில் சுற்றுலா மேற்கொள்ளும்பொது தமது அந்நியச்செலாவணித் தேவைகளுக்கான சிபாரிசைப் பெறும் பொருட்டு இந்திய அரசின் மனிதவள மேம்பாடு அமைச்சகத்திற்கு (கல்வி மற்றும் பண்பாட்டுத்துறை) விண்ணப்பிக்கலாம். அங்கிகரிக்கப் பட்ட வணிகர்கள், அந்த அமைச்சகத்

திலிருந்து பெறப்பட்ட அனுமதியின் பேரில் அதில் குறிப்பிட்ட அளவு, மற்றும் சொல்லப்பட்ட விதிகளுக்குட்பட்டு கலைஞர்களுக்கு அந்நியச் செலாவணியை வழங்கலாம்.

### A. 5 சொந்த முறைப்பயணங்கள்

தனிப்பட்ட காரணங்களுக்காக அயல்நாடு செல்லும் ஒருவருக்கு எந்த ஒரு தேவைக்காகவும், அந்நியச்செலாவணி வழங்கப்படலாம்.

### A.6 சில சூழ்நிலைகளில் அந்நியச்செலாவணிப்பயன்பாடு குறித்த தொடர் செயல் பாடு

மதிப்பீட்டின் அடிப்படையில், உதாரணமாக மருத்துவச்சிகிச்சைகாக மற்றும் பரிசோதனைக்காக, மதிப்பீட்டின் அடிப்படையில் ஒரு அங்கிகாரம் பெற்ற வணிகர் அந்நியச்செலாவணியை விற்றிருந்தால், அவர் தொடர் செயலாக்கத்தை மேற்கொள்ள வேண்டும். அதாவது இவ்வாறு அந்நியச் செலாவணி பெற்ற நபர், இந்தியா திரும்பிய 15 நாட்களுக்குள் தான் செலவழித்த அந்நியச்செலாவணிக்கான கணக்குகளை, அந்நியச் செலாவணிவழங்கிய குறிப்பிட்ட அங்கிகரிக்கப்பட்ட வணிகரின் கிளை அலுவலக்த்திற்கு சமர்ப்பித்தாரா என்பதனை அங்கிகரிக்கப்பட்ட வணிகர் உறுதி செய்து கொள்ளவேண்டும். அந்த விண்ணப்பதாரர்குறித்த காலத்திற்குள் அவ்வாறு கணக்கு அளிக்கத் தவறினால், அவரின் குடியிருப்புப் பகுதியின் ஆட்சி எல்லைக்குட்பட்ட ரிசர்வ் வங்கியின் பிராந்திய அலுவலகத்திற்கு அதனை அங்கிகரிக்கப்பட்ட வணிகர் தெரிவிக்க வேண்டும்.

### A.7. அந்நியச்செலாவணி ஒப்புவிப்பதற்கான காலம்

அந்நியச்செலாவணி எதாவது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக வாங்கப்பட்டு, அதற்காகவோ அல்லது FEMA 1999ன் கீழ் குறிக்கப்பட்ட விதிகள் மற்றும் விதிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்ட எந்தவொரு நோக்கத்திற்காகவும் செலவழிக்கப்படாமல் இருந்தால், அந்த செலவழிக்கப் படாத அந்நியச்செலாவணி வாங்கப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அங்கிகரிக்கப் பட்ட வணிகரிடம் ஒப்படைக்கப் படவேண்டியது அவசியமாகும். (இது தொடர்பாக அறிவிப்பு எண் FEMA.9 / 2000- RB. தேதி 3.5.2000).

**<u>குறிப்பு</u> :**

மேற்குறிப்பிட்டபடி 60 நாட்களுக்குப் பின்னர், அந்நியச் செலாவணியைத் திருப்பித் தரும்பொருட்டு எவராவது அங்கிகரிக்கப் பட்ட வணிகரை அணுகினால் அதையே காரணமாகக் காட்டி அந்த அந்நியச் செலாவணியைத் திருப்பி வாங்கிக்கொள்ள அங்கிகரிக்கப்பட்ட வணிகர் மறுத்திடக்கூடாது.

## A. 8. செலவழிக்கப்படாத அந்நியச்செலாவணி

செலவழிக்கப்படாத அந்நியச்செலாவணி ரூபாய்த்தாளாய் இருக்குமானால், இந்தியாவிற்கு வந்த பிறகு அந்தப்பயணி அதை இந்தியாவிற்கு வந்ததிலிருந்து 90 நாட்களுக்குள் அங்கிகரிக்கப்பட்ட வணிகரிடம் அதற்கு ஈடான இந்திய ரூபாயைப் பெற்றுக்கொண்டு திருப்பியளிக்கப் படவேண்டும். அந்த எஞ்சிய தொகை பயணக் காசோலையாக இருக்குமானால் அங்கிகரிக்கப்பட்ட வணிகரிடம், இந்தியாவிற்குத் திரும்பிய நாளிலிருந்து 180 நாட்களுக்குள் ஒப்படைக்கப் படவேண்டும். அவ்வாறு திருப்பிக்கொண்டுவரப்பட்ட அந்நியச்செலாவணி, அந்த மேற்குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் மேற்கொள்ளப்படும் அடுத்த அயல்நாட்டுப்பயணத்திற்காக உபயோகப் படுத்திக் கொள்ளலாம். எவ்வாறாயினும் ஒரு அயல்நாட்டு சுற்றுலாப்பயணம் மேற்கொண்டு திரும்புகின்ற ஒருவர் அயல்நாட்டு நாணயம் மற்றும் பயணக்காசோலைகள் என்று மொத்தமாக 2000 அமெரிக்க டாலர் வரை எந்த வரம்பின்றி தம்வசம் வைத்துக்கொள்ளலாம். ( அறிவிப்பு எண் FEMA 11 / 2000–RB. தேதி 3.5.2000 ஐக் காண்). இவ்வாறு தம்வசம் வைத்துக்கொள்ளும் அயல்நாட்டு நாணயத்தை ஒரு பயணி தனது தொடர்கின்ற வெளிநாட்டுப் பயணங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**குறிப்பு** :

(a) ஏதாவது நபர் இவ்வாறு மேற்குறிப்பிட்ட காலம் கழித்து அந்நியச் செலாவணியைத் திருப்பித்தர அங்கிகரிக்கப்பட்ட வணிகரை அணுகினால், அந்தகுறிப்பிட்ட காலம் முடிவடைந்துவிட்டது என்ற காரணத்தைக்காட்டி அதை ஏற்றுக்கொள்ள அங்கிகரிக்கப்பட்ட வணிகர் மறுக்கலாகாது.

## A.9 பயண ஏற்பாடுகளுக்கான பண அனுப்பீடுகள்

(i) நடைமுறையிலுள்ள விதிகள், கட்டுப்பாடுகள் மற்றும் கட்டளைகளுக்குட்பட்டு, ஒரு அங்கிகரிக்கப் பட்ட வணிகரிடமிருந்து வாங்கப் பட்ட அந்நியச் செலவாணியைப் பயன்படுத்தி, சுற்றுலாப் பயணியின் வேண்டுகோளுக்கிணங்கி, அவர் செல்லவிருக்கும் வெளிநாட்டில் அவருக்குத்தேவையான ஹோட்டல் வசதிகள், பயண ஏற்பாடுகளுக்கான பணத்தை ஓரளவுக்கு அனுப்பி வைக்கலாம்.

(ii) நடைமுறையிலுள்ள விதிகள், கட்டுப்பாடுகள் மற்றும் கட்டளைகளுக்குட்பட்டு, அங்கிகரிக்கப்பட்ட வணிகரிடமிருந்து ஒரு பயணி வாங்கிய அந்நியச் செலவாணியைப் பயன்படுத்தி (சொந்த முறைப் பயணத்திற்கான அந்நியச்செலாவணி உட்பட) வெளிநாட்டு தங்கும் விடுதிகள் / மற்றும் முகவர்களிடம் உடன்படிக்கை வைத்துள்ள இந்திய முகவர்கள் வேண்டுகோளுக்

கிணங்கி இந்தியாவிலிருந்து செல்லும் பயணிக்கான செலவுத் தொகையை அனுப்பி வைக்கலாம்.

(iii) அங்கிகரிக்கப்பட்ட வெளிநாட்டு ஹோட்டல் / மற்றும் முகவர்களிடம் உடன்படிக்கை வைத்துள்ள இந்திய முகவர்கள் பெயரில் கீழ்க்கண்டவற்றை அனுசரித்து அயல்நாட்டு நாணயக் கணக்கினைத் துவக்கலாம்.

(a) அந்தக் கணக்கில் வைக்கப்படும் வரவுகள்

I. பயணிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட அந்நியச் செலாவணி

II. முன்பதிவுகள் மற்றும் பயண ஏற்பாடுகளில் ரத்து செய்யப் பட்டவைக்காகத் திருப்பிப்பெறப்பட்ட தொகை.

(b) மேலே சொல்லப்பட்ட (ii) இணங்க இந்தியாவுக்கு வெளியில் ஹோட்டலில் தங்கியதற்காக/ சுற்றுலா ஏற்பாடு போன்றவற்றிற்காக பணம் வழங்க அந்நியச் செலாவணியை கழித்தல்

## A.10 இந்திய ரூபாயில் பணவழங்கீடு

தனிப்பட்ட சொந்தக்காரணங்களுகாகவோ, வேறெதற்காகவோ, மேற்கொள்ளப் படும் வெளிநாட்டுப் பயணத்திற்கான தேவைக்காக அந்நியச் செலாவணியை விற்கும் பொருட்டு, இந்திய ரூபாய் 50,000/- வரை பணமாகப்பெற்றுக் கொள்ளலாம். எப்போதெல்லாம் விற்கப்படும் அந்நியச் செலாவணிக்கு ஈடான தொகை ரூ.50,000/- ஐ விட அதிகமாகிறதோ அப்போது (i) விண்ணப்பதாரரின் வங்கிக் கணக்கின் மிது வழங்கப்பட்ட கோடிட்ட காசோலையாகவோ, அல்லது (ii) அவரின் பயணச்செலவை மேற்கொள்ளும் நிறுவனம் அல்லது குழுமத்தின் வங்கிக்கணக்கின் மீது வழங்கப்பட்ட காசோலையாகவோ (iii) வங்கியின் காசோலை / வழங்காணை / வரைவோலையாகவோ பெறலாம்.

<u>குறிப்பு :</u>

ஒருமுறை அல்லது அதற்கு மேற்பட்டு பெறப்படும் அந்நியச்செலாவணிக்கான தொகை ரூ.50,000/- த்திற்கு மேற்படும் பொழுது ஒரு பயணம் / அல்லது ஒரு சுற்றுலாவிற்குத் தேவையான தொகையானால், அது மேற்குறிப்பிட்டபடி காசோலையாகவோ அல்லது வரைவோலை யாகவோ செலுத்தப்படவேண்டும்.